சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.II, ஜெயங்கொண்டம்

OS. No 258 of 2020

2024–ம் ஆண்டு மார்ச் 20–ம் நாள்(1969–ம் ஆண்டு 54–வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. தனஞ்செயன், கிரேடு II பெஞ்ச் கிளார்க் அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

பெயர் – கலியபெருமாள் தொழில்–

த/பெ– சுப்பையா வட்டம்– ஆண்டிமடம்

கிராமம் – விளந்தை வயது–87

முதல் விசாரணை வா.சா. 1

நான் இவ்வழக்கின் 1 வாதி ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என்தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்கு பதிலாக எழுத்துமூல நிரூபணவாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும். அது உண்மை, என்தரப்பில்

1. என்னால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வம்சாவழி பட்டியல் **வா.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 26.12.1924 ல் எனது பெரியப்பா முத்துக்குமாரசாமி வாங்கிய கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 20.11.2019 ல் தாவா சொத்துக்களுக்கு 01.01.1920 முதல் 31.12.1974 முடிய உள்ள காலங்களுக்கு வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 15.11.2019 தேதியிட்ட 01.01.1975 முதல் 18.11.2019 தேதி முடிய உள்ள வில்லங்கசான்றிதழ் **வா.சா. ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 18.05.2012 – ல் 1ம் பிரதிவாதிக்கும் அவரது சகோதரருக்கும் இடையே ஏற்பட்ட பாக அட்டவணை பதிவு சான்று நகல் **வா.சா. ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6 06.11.2023–ல் 1–ம் பிரதிவாதி 3–ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த கிரய பத்திர பதிவு சான்றிட்ட நகல் **வா.சா. ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7 . 28.11.2019 ல் காவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் நகலின் எனது கை நகல் **வா.சா. ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கினங்க குறுக்கு விசாரனை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ஒப்பம்/
சார்பு நீதிபதி,
ஜெயங்கொண்டம்.